முதலீட்டாளர்களின் முதல் முகவரி இனி தமிழகம்

முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜூலை 20: முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக தமிழகம் மாற வேண்டும் என்ற இலக்குடன் செயல்பட்டு வருகிறோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். தெற்காசியாவிலேயே தொழில் முதலீட்டுக்கான மாநிலமாக தமிழகத்தை உயர்த்துவோம் என்றும் அவர் கூறினார்.

பல்வேறு நிறுவனங்களுடன் தொழில் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாற்றம், புதிய தொழில் ஆலைகளுக்கு அடிக்கல் நாட்டல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் தமிழக அரசின் சார்பில் சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற, 'தொழில் முதலீட்டாளர்களின் முதல் முகவரி-தமிழ்நாடு' என்ற இந்த நிகழ்ச்சியில், 35 தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. மேலும், ஒன்பது ஆலைகளுக்கான அடிக்கல்லும், 5 ஆலைகளின் செயல்பாடுகளை தொடக்கியும் வைத்தார். இதைத் தொடர்ந்து, நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியது:-

ஆட்சிப் பொறுப்புக்கு வந்த காலம், மிகத் துயரமான கரோனா காலமாகும். தமிழ்நாடு அரசின் துணிச்சலான, துரிதமான நடவடிக்கைகளின் காரணமாக கரோனாவை வென்ற காலமாக இதனை மாற்றினோம். கரோனா தமிழ்நாட்டில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எதையும் எதிர்கொள்ளும் வல்லமை கொண்டதாக மாநிலத்தை மாற்றியிருக்கிறோம்.

தெற்காசியாவிலேயே உகந்த மாநிலம்: கரோனா காலத்திலும் கணிசமான முதலீடுகளை தமிழகம் ஈர்த்துள்ளது. சவால்களை எதிர்கொள்ளும் எங்களது அரசின் திறன் என்றென்றும் நிலைத்து நீடித்து இருக்கும். உலகளவில் உற்பத்தித் துறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இருந்தாலும், தமிழ்நாட்டின் பொருளாதாரம் புத்துணர்வு பெற்று இயங்கத் தொடங்கியுள்ளது.

தமிழகத்தை உயர்த்துவதே லட்சியம்: தெற்காசியாவிலேயே தொழில் புரிவதற்கு உகந்த மாநிலமாகத் தமிழகத்தை உயர்த்துவதே எங்களது அரசின் லட்சியம். தமிழ்நாடு என்பது பண்பாட்டின் முகவரியாக இருந்தது; இருந்து வருகிறது. அத்தகைய தமிழ்நாடு, முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக மாற வேண்டும் என்ற இலக்குடன் செயல்பட்டு வருகிறோம்.

2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி அமெரிக்க டாலர்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தி கொண்ட பொருளாதாரமாக உருவாக்குவதே எங்களது குறிக்கோள். அந்த இலக்கை நோக்கிப் பயணிக்க அனைவரது ஒத்துழைப்பையும் கோருகிறேன்.

அதிகமுள்ள மாவட்டங்கள்: தொழிற்சாலைகள் அதிகமுள்ள வல்லம் வடகால், கிருஷ்ணகிரி, திருப்பூர் உள்ளிட்ட இடங்களில் குடிநீர் வசதி உள்பட அடிப்படை வசதிகளுக்கான பணிகள் நடந்து வருகின்றன. ரூ.500 கோடி அளவிலான தொழில் மேம்பாட்டு நிதி உருவாக்க உத்தரவிட்டுள்ளேன். இதன்மூலம், தொழில் பூங்காக்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகள், புத்தாக்க மையங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள், ஆகியவற்றை மேற்கொள்ள இயலும்.

தொழில்புரட்சி 4.0: மின் வாகனங்கள் உற்பத்தி, சூரிய மின்சக்தி கலன்கள், காற்றாலை கலன்கள், தகவல் தொழில்நுட்பம், தகவல் தரவு மையங்கள், மின்னணு வன்பொருள்கள் உற்பத்தி ஆகிய துறைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். தொழில்துறைப் புரட்சி 4.0 என்று அழைக்கப்படும் நான்காவது தொழிற்புரட்சி நமது மாநிலத்துக்குக் கிடைத்த அரிய வாய்ப்பாகும்.

தமிழகத்தில் முதலீடு செய்பவர்களின் அனுபவங்களை எளிதாக்கவும், இனிமையாக்கவும், ஏற்றுமதிக் கொள்கை, மருந்துப் பொருள்கள் மற்றும் உயிரிநுட்பக் கொள்கை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களை ஊக்குவிக்க தனி கொள்கை எனப் பல கொள்கைகளை வெளியிடவும் அரசு திட்டமிட்டுள்ளது.

சீரான வளர்ச்சி: அனைவருக்கும் உயர் கல்வி, சமூக மேம்பாடு, தொழில் வளர்ச்சி ஆகிய மூன்றும் ஒரே நேரத்தில் சீராக வளர வேண்டும். இதுவே அரசின் இலக்கு. இந்த மூன்றும் தனித்தனியாக வளர்ந்து விட முடியாது. ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றொன்று துணை செய்வதாக அமைய வேண்டும். அந்த வளர்ச்சிக்குத் தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் தங்களது முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கூறினார்.

தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றினார். தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு வரவேற்றார். தொழில் துறை முதன்மைச் செயலாளர் என்.முருகானந்தம் நன்றி தெரிவித்தார்.

தொழில்துறை சார்பில் சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிய தொழில் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட தொழில் நிறுவனப் பிரதிநிதிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் இறையன்பு, தொழில்துறை முதன்மைச் செயலர் நா. முருகானந்தம் உள்ளிட்டோர்.

ஒற்றைச் சாளர இணையம் 2.0

தொழில் புரிவதை எளிதாக்கவும், அரசின் அனுமதிகளை விரைந்து வழங்கிடவும் ஒற்றைச் சாளர இணையதளம் 2.0-வை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.

இது குறித்து அவர் தனது உரையில் கூறியது:-இப்போதுள்ள முதலீட்டாளர்களுக்கு மட்டுமின்றி, புதிய முதலீட்டாளர்களுக்கும் உதவிடும் வகையில் 24 துறைகளின் 100 சேவைகள் கொண்ட ஒரு மேம்படுத்தப்பட்ட இணையதளமாக அது இருக்கும். இணைய முறையில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். உரிய துறைகளுக்கு அவை உடனடியாக அனுப்பி வைக்கப்படும். உரிய துறைகளுடன் காணொலி மூலமாகச் சந்திப்புகள் நடத்தப்படும்.

செயற்கை நுண்ணறிவு உதவியுடன் வாடிக்கையாளர்களுடன் உடனடி உரையாடல்கள் நடத்தப்படும். இந்த வசதிகள் அனைத்தும் ஒற்றைச் சாளர இணையதளம் 2.0 மூலமாக கிடைக்கும். கூடுதலாக 210 சேவைகளை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் சேர்க்கத் திட்டமிட்டுள்ளோம் என்று தெரிவித்தார்.

'அடுத்த மூன்றாண்டுகளில் 100% எழுத்தறிவுக்கு இலக்கு'

திருச்சி, ஜூலை 20: தமிழகத்தில் அடுத்த மூன்றாண்டுகளில் 100 சத எழுத்தறிவு என்ற நிலையை எய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி.

திருச்சி கள்ளிக்குடி ஊராட்சியில் நூறு சத எழுத்தறிவு இயக்கத்தைத் தொடக்கி வைத்த அமைச்சர் கூறியது:

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளின் கட்டமைப்புகளை விரிவாக ஆய்வு செய்ய முதல்வர் அறிவுறுத்தியுள்ளார். எனவே, நாள்தோறும் செல்லும் இடங்களில் உள்ள பள்ளிகளை ஆய்வு செய்கிறோம்.

கரோனாவால் மே மாதம் நடைபெறும் பணி மாறுதல் கலந்தாய்வை இந்தாண்டு நடத்த முடியவில்லை.

தொற்று குறைந்து வரும் நிலையில் ஆசிரியர்களைப் பள்ளிக்கு வரவழைத்து சில பணிகளை மேற்கொண்டு வருகிறோம். முதல்வரின் ஆலோசனையைப் பெற்று விரைவில் பணி மாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட்டு, பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும்.

கல்வித் தொலைக்காட்சியை மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் ஆலோசிக்கப்படுகிறது.

6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளிகளில் உயர்தர ஆய்வகங்கள் உள்ளன. உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் கணினி ஆய்வகங்கள் உள்ளன. பள்ளிகள் செயல்படாததால் இந்த ஆய்வகங்களில் பயன்படுத்தப்படாமல் உள்ள கணினிகள் இயங்குகின்றனவா என்பதை ஆய்வு செய்ய உத்தரவிட்டுள்ளோம். இதுகுறித்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து அறிக்கை வந்த பின் இயங்காத கணினிகள் மாற்றப்படும். பிளஸ் 2-வில் கூடுதல் மதிப்பெண் தேவைப்படும் மாணவர்கள் அக்டோபரில் தேர்வெழுதலாம். கரோனாவின் அப்போதைய சூழலைக் கருத்தில் கொண்டு அந்தத் தேர்வு நடத்தப்படும். இந்த வகையில் தேர்வெழுத விரும்பும் மாணவர்கள், கல்லூரியில் சேர முதல்வரிடம் ஆலோசனை பெற்று சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்.

பள்ளிஇடைநிற்றல்குறித்தகணக்கெடுப்பு முடிந்த பிறகு இடைநிற்றலைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். பள்ளிக்கு வரும் மாணவர்களுக்கு மட்டும் கல்வி தராமல், எழுத்தறிவு பெற்றோரின் சதவீதத்தை உயர்த்த எழுத்தறிவு இயக்கம் நடத்தப்படுகிறது.

கிராமங்களில் எழுத, படிக்கத் தெரியாத நிலையில் உள்ள முதியோருக்கு இதற்காகப் பயிற்சியளிக்கப்படுகிறது. இவர்களின் சொத்துகளை உறவினர்களே ஏமாற்றி அபகரிக்கும் நிலையைத் தவிர்க்கவும் கிராமப்புறத்தில் உள்ளோருக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

மாநிலத்தின் எழுத்தறிவு 81 சதமாக உள்ளதை அடுத்த 3 ஆண்டுகளுக்குள் 100 சதமாக உயர்த்துவதே எங்களது இலக்கு. இதற்காக 1 கோடி பேருக்கு கல்வி கற்றுத் தரப்படுகிறது. குறைந்தபட்சம் 6 மாதங்களில் கையெழுத்திடும் வகையில் அவர்களைத் தயார்படுத்த உள்ளோம் என்றார் அமைச்சர்.

நிகழ்வுகளில் மாவட்ட ஆட்சியர் சு. சிவராசு, கோட்டாட்சியர் சிந்துஜா, முதன்மைக் கல்வி அலுவலர் அறிவழகன், எம்எல்ஏ பழனியாண்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்வழிக் கல்வி அரசுப் பணியில் 20% ஒதுக்கீடு

உயர்நீதிமன்றம் நிபந்தனை

மதுரை, ஜூலை 20: தமிழக அரசு வேலைவாய்ப்பில் தமிழ் வழிக் கல்வி பயின்றோருக்கான 20 சதவீத ஒதுக்கீட்டில், ஒன்றாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை தமிழில் படித்தவர்களை மட்டுமே தேர்வு செய்யவேண்டும் என சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் குரூப் 1 தேர்வுக்கான அறிவிப்பு 2020 ஜனவரி 20-இல், வெளியிடப்பட்ட நிலையில், இந்த ஆண்டு ஜனவரி 3-இல் முதல்நிலைத் தேர்வு நடைபெற்றது. அதன் தேர்ச்சி பட்டியல் பிப்ரவரி 9-இல் வெளியானது.

இப்பட்டியலில், தமிழ் வழிக் கல்விக்கான 20 சதவீத ஒதுக்கீட்டு சலுகையில் ஒன்றாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு மட்டுமே தேர்வு செய்ய வேண்டும் என்ற உயர்நீதிமன்றத்தின் உத்தரவு பின்பற்றப்படவில்லை. மாறாக பட்டப்படிப்பை மட்டும் தமிழில் பயின்றவர்களுக்கும் 20 சதவீத ஒதுக்கீட்டு சலுகை வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே குரூப் 1 தேர்வு முடிவை ரத்து செய்து, புதியப் பட்டியலை வெளியிட வேண்டும் என தஞ்சையைச் சேர்ந்த அருண் உள்பட 6 பேர் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு தாக்கல் செய்தனர். ஏற்கெனவே, மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பதிலளிக்குமாறு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற குரூப் 1 முதல்நிலைத் தேர்வுக்கு மட்டும் தமிழ் வழிக் கல்வி சலுகையில் விலக்கு அளிக்க வேண்டும் எனவும், இந்த ஆண்டு பிப்ரவரியில் வெளியிடப்பட்ட முடிவுகளை மாற்றம் செய்தால், அதிகாரிகளை நியமிப்பதில் கால தாமதம் ஏற்படும் எனவும் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மனு தாக்கல் செய்தது.

இந்த மனு நீதிபதிகள் என்.கிருபாகரன், பி.புகழேந்தி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, ஆங்கில வழியில் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, அரசு வேலைக்காக பட்டப் படிப்பை மட்டும் தமிழ் வழிக் கல்வி படித்தவர்களுக்கு 20 சதவீத சலுகை வழங்கலாமா? எனக் கேள்வி எழுப்பிய நீதிபதிகள், அரசுப் பணியில் சேருவதற்காக தமிழகத்தில் உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பை தமிழ் வழியில் படித்ததாக சான்றிதழ்களை முறைகேடாக பலரும் பெற்றுள்ளதாவும், எனவே, தமிழ் வழிக்கல்வி 20 சதவீத ஒதுக்கீட்டில், ஒன்றாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை தமிழ் வழியில் பயின்றவர்களை மட்டுமே தேர்வு செய்யவேண்டும் எனவும் கூறி மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

நடிகை குஷ்புவின் சுட்டுரை கணக்கு 'ஹேக்': டிஜிபியிடம் புகார்

சென்னை,ஜூலை 20: தனது சுட்டுரை (ட்விட்டர்) கணக்கு 'ஹேக்' செய்யப்பட்டது தொடர்பாக நடிகை குஷ்பு தமிழக காவல்துறையின் சட்டம் மற்றும் ஒழுங்கு டிஜிபி சி.சைலேந்திரபாபுவிடம் செவ்வாய்க்கிழமை புகார் அளித்தார்.

பிரபல தமிழ் திரைப்பட நடிகையும், பாரதிய ஜனதா கட்சியின் நிர்வாகியுமான குஷ்பு, ட்விட்டரில் கணக்கு வைத்துள்ளார். இந்தக் கணக்கை சுமார் 13 லட்சம் பேர் பின் தொடர்கின்றனர். இந்நிலையில் இரு நாள்களுக்கு முன்பு குஷ்புவின் ட்விட்டர் ஹேக் செய்யப்பட்டு, அதில் இருந்த புகைப்படம், தகவல்கள் மாற்றப்பட்டன.

மேலும் குஷ்பு, ஏற்கெனவே பதிவிட்டிருந்த சில கருத்துகள் திருத்தப்பட்டன. சில கருத்துகள் அழிக்கப்பட்டன. இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த குஷ்பு, தனது ட்விட்டர் ஹேக் செய்யப்பட்டது குறித்த சமூக ஊடகங்கள் வாயிலாக தனது ரசிகர்கள், நண்பர்கள், அந்த கணக்கை பின் தொடர்பவர்கள் ஆகியோருக்கு தகவல் தெரிவித்தார்.

இந்நிலையில் நடிகை குஷ்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு டிஜிபி சி.சைலேந்திரபாபுவை சந்தித்து, தனது ட்விட்டர் கணக்கை ஹேக் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மனு அளித்தார்.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 16,301 கனஅடியாக அதிகரிப்பு

மேட்டூர், ஜூலை 20: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து செவ்வாய்க்கிழமை காலை 16,301 கனஅடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி அணை, கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து உபரிநீர் காவிரி ஆற்றில் திறந்துவிடப்படுவதால் கடந்த சில நாள்களாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 16,301 கனஅடியாக இருந்தது. இதையடுத்து அணையின் நீர்மட்டம் 72.61 அடியிலிருந்து 73.29 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 12,804 கன அடியிலிருந்து 16,301 கனஅடியாக அதிகரித்துள்ளது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 12,000 கன அடி வீதம் தண்ணீர்த் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர் இருப்பு 35.59 டி.எம்.சி.யாக இருந்தது.

தமிழில் விரைவில் உயர்கல்வி பாடப் புத்தகங்கள்

திருவள்ளூர், ஜூலை 20: மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயர்கல்விக்கான தமிழ்ப் பாடப் புத்தகங்கள் அச்சிடும் பணி விரைவில் தொடங்க இருப்பதாக தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் ஐ.லியோனி தெரிவித்தார்.

திருவள்ளூர் அருகே புங்கத்தூரில் நுகர்பொருள் வாணிபக் கிடங்கில் வைக்கப்பட்டுள்ள பாடப் புத்தகங்களை செவ்வாய்க்கிழமை அவர் ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தற்போது ஆங்கில வழியில் மருத்துவம், பொறியியல் படிக்கும் கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர். இதைத் தவிர்க்கும் நோக்கில், தமிழ் வழியில் மருத்துவம், பொறியியல் பாடங்களை நடத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அதற்காக மருத்துவம், பொறியியல் பாடங்களை தமிழ் வழியில் அச்சிடும் பணி விரைவில் தொடங்க உள்ளது என்றார். ஆய்வின்போது, எம்எல்ஏ வி.ஜி. ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

காணவில்லை

திருநள்ளாறு பகுதி சுரக்குடி, 9, கீழத்தெரு மாரிமுத்து மகன் M.ரத்தினசாமி (26) எனும் நான், கடந்த 10-ஆம் தேதி திருநள்ளாறு கடைத்தெரு சென்றபோது, P.0080975 எண் கொண்ட எனது பாஸ்போர்ட் காணாமல் போய் விட்டது. இதனை கண்டெடுத்தோர் மேற்கண்ட முகவரிக்கு தெரிவிக்க வேண்டுகிறேன்.

மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம்
(ஓர் இந்திய அரசு நிறுவனம்)
மண்டல அலுவலகம்: எண்.4, வடக்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை-15.
Ph: 22201216/0350. Fax: 22200068
E-Mail: rmmdrs@cewacor.nic.in
எண். CWC/RO-CNI/Admn/Consultant/2021-22
நாள்: 21.07.2021

அறிவிப்பு

ஒப்பந்த அடிப்படையில் ஆலோசகராக பணியாற்ற ஓய்வு பெற்ற சி.டபிள்யூ.சி அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விளம்பரம் மற்றும் விண்ணப்பத்தின் விவரங்களை www.cewacor.nic.in இல் காணலாம். அனைத்து அம்சங்களிலும் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிப் பதற்கான கடைசி தேதி -30.07.2021 (5.00 pm)

மண்டல மேலாளர்

திருந்திய குறும ஒப்பந்தப்புள்ளி

குறுவை தொகுப்பு திட்டம் 2021ன் கீழ் 138 மெ.டன் பசுந்தாளுர விதைகள் சப்ளை செய்திட நாகப்பட்டினம் வேளாண்மை இணை இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து குறும ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

குறைந்தது மூன்று ஆண்டுகள் இப்பிரிவில் முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் : 29.07.2021 பிற்பகல் 2.00 மணி.

மேலும் விபரங்களுக்கு அணுகவேண்டிய முகவரி :
வேளாண்மை இணை இயக்குநர்,
மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம்,
நாகப்பட்டினம் – 611003.
தொலைபேசி எண் : 04365–253096
அலைபேசி எண். 8825685322.
மின்னஞ்சல் முகவரி : jdanagai@gmail.com

ஒப்பந்தப்புள்ளிக்கான விண்ணப்பக் கட்டணம் : ரூ. 100/- மட்டும்

வேளாண்மை இணை இயக்குநர்,
நாகப்பட்டினம்

வெ. ஆணை எண். 115 /செ.ம.தொ.அ / 2021,
நாள் : 20.07.2021, நாகப்பட்டினம்.

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!

தமிழ் நாடு அரசு
நீர்வள ஆதாரத் துறை
பெண்ணையாறு வடிநில வட்டம், திருவண்ணாமலை – 606 603.
மொத்த தொகை ஒப்பந்த முறை – விலை விகித ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
(இரு உறை ஒப்பந்த வழி முறை)
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 03/ பெவவ/தி.மலை/2021 – 2022/ கோ. 59 / இவஅ.4 /
நாள்: 20.07.2021.

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் மூடி முத்திரையிடப்பட்ட உறைகள் கொண்ட ஒப்பந்தப்புள்ளி இரு உறை வழிமுறையில் "Rehabilitation and Improvements to the Shenbagathope Reservoir Project in Polur Tauk of Tiruvannamalai District" (பணியின் மதிப்பு ரூ. 1,261.00 இலட்சம் ஜி.எஸ்.டி உட்பட) பணிக்காக கண்காணிப்புப் பொறியாளர், நீ.ஆது., பெண்ணையாறு வடிநில வட்டம், திருவண்ணாமலை - 3, அவர்களால் 25.08.2021 பிற்பகல் 03.00 மணி வரை தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. இவ்வொப்பந்தப்புள்ளி அதே தேதியில் பிற்பகல் 03.30 மணிக்கு திறக்கப்படும். பணியின் விபரம், தோராய மதிப்பு, முன் வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை, கிடைக்குமிடம், ஒப்பந்தப்புள்ளிக்கான தகுதிகள் மற்றும் இதர அனைத்து விவரங்கள் www.tenders.tn.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர், (கூ./பொ) நீ.ஆது.,
பெண்ணையாறு வடிநில வட்டம், திருவண்ணாமலை – 3

[illegible]/207/[illegible]

சிட்டி யூனியன் பாங்க் லிட்.,
CUB
வலங்கைமான் கிளை, வலங்கைமான், திருவாரூர்

தங்க நகைகள் ஏல அறிவிப்பு

எங்கள் வங்கியின் கிளை அலுவலகத்தில், தங்க நகைகளின் பேரில் கடன் பெற்றுள்ள கீழ்கண்ட நபர்களுக்கு, நகைக்கடன் கெடு முடிந்து நெடுநாட்கள் ஆகியும் கடன் பாக்கி முழுவதும் செலுத்தி நகைகளை திரும்பப்பெற நோட்டீஸ் அனுப்பியும், கடன் கணக்கை முடித்து நகைகளை மீட்காதபடியால் உடனடியாக அசல் வட்டி மற்றும் இதர செலவுகள் உட்பட கடன் முழுவதும் செலுத்தி நகைகளை திரும்பப்பெற வேண்டுமென்று கோரப்படுகிறது. அப்படி தவறினால், கடனுக்கு ஈடாக வைக்கப்பட்டுள்ள நகைகள், கடன் பெற்றவர்களின் செலவிலேயே வருகிற **29.07.2021 தேதி வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு** வங்கி கிளை அலுவலகத்தில் கிளை மேலாளர் அவர்களால் பகிரங்க ஏலம் விடப்படும் எனவும் அல்லது மறு ஏல அறிவிப்பின்றி வங்கி நிர்வாகத்தின் சௌகரியப்படி வேறு ஏதாவது தேதியில் ஏலம் விடப்படும் எனவும் இதன் வாயிலாக அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கீழ்க்கண்ட கடன் பெற்றவர்களில் யாராவது இறந்திருந்தால், அவர்களின் வாரிசுதாரர்களுக்கும், பாத்தியப்பட்டவர்களுக்கும் வங்கி நோட்டீஸ் கிடைக்கப் பெறாதவர்களுக்கும் பொருந்தும். ஏலத்தில் பெற்ற தொகையில் மேற்படி நகை கடனுக்கு உரிய தொகை போக மீதியிருந்தால், அக்கடன்தாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய பிற கடன்களுக்கோ, ஜாமீன்தாரராக உள்ள கடன்களுக்கோ வரவு வைக்கப்படும். ஏலத்தில் பெற்ற தொகை கடன் தொகையை விட குறைவாக இருந்தால் மீதித்தொகை சட்ட நடவடிக்கை மூலம் வசூலிக்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது. கடன் பெற்ற நபர்கள் தங்கள் கடன் கணக்கில் ஏதேனும் பகுதி பணம் செலுத்தியிருந்தாலும், ஏல தேதிக்குள் கடன் வட்டி இதர செலவுகள் முழுவதும் கட்டி நகைகளை மீட்காவிடில் அந்த நகைகளும் ஏலம் விடப்படும் என அறிவிக்கின்றோம்.

இந்த நடவடிக்கைகளை மாற்றவோ, ஒத்திப்போடவோ, நிறுத்தி வைக்கவோ, குறிப்பிட்ட நகைகளை ஏலத்திலிருந்து நீக்கி வைக்கவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு என்பதனை அறியவும்.

வ. எண்.	நகைக்கடன் எண்	கடன் வாங்கிய தேதி	கடன் பெற்றவர் பெயர் மற்றும் முகவரி	நகைகளின் எடை கிராமில்
1	502112025277867	07.06.2018	A.V.D. சுரேஷ், த/பெ. A.V. துரை, சன்னதி தெரு, ஆண்டாள்கோயில், வலங்கைமான் அஞ்சல், திருவாரூர் மாவட்டம் – 612804.	32.9
2	502112025336654	18.03.2020	G. தக்ஷிணாமூர்த்தி, த/பெ. கோவிந்தசாமி, கதவு எண்.16, கிழக்கு அக்ரஹாரம், வலங்கைமான் அஞ்சல், திருவாரூர் மாவட்டம் – 612804.	24.0

பின்குறிப்பு :
1. ஏலதாரர்கள் தங்கள் PAN விவரங்கள் கட்டாயம் எடுத்து வரவேண்டும். உரிய KYC ஆவணங்கள் அசல் மற்றும் அதன் நகல் உள்ளவர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.
2. ஏல தேதி அன்றே ஏலம் எடுத்தவர்கள் முழு தொகையும் செலுத்த வேண்டும். இல்லாவிடில் ஏல முன் தொகை திருப்பி தரப்படமாட்டாது.

இடம் : வலங்கைமான்
தேதி : 20.07.2021

கிளை மேலாளர்.

E-ஏலப் பொது அறிவிப்பு –
ஸ்டெர்லிங் பயோடெக் லிமிடெட் (கலைப்பு நிலையில்)
(இந்திய இன்சால்வன்சி மற்றும் பாங்க்ரப்ட்சி வாரிய (கலைப்பு நடவடிக்கை) ஒழுங்குமுறைகள் 2016, ஒழுங்குமுறை 32 & 33 ஆகியவற்றின் கீழ்)

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாக அறிவிப்பது யாதெனில், கலைப்பு நிலையில் இருக்கும் ஸ்டெர்லிங் பயோடெக் லிமிடெட் ("கூட்டுரிமைக் கடன் நிறுவனம்") நிறுவனத்தின் கலைப்பு அலுவலரால் நடத்தப்பட உள்ள e-ஏலத்தில் கலந்து கொண்டு கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தைச் செயல்பாட்டிலுள்ள நிறுவனம் எனும் அடிப்படையில் மொத்தமாக விலைக்கு வாங்க ஆர்வமுள்ள ஏலதாரர்களிடமிருந்து ஏலப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. இதற்கான விவரங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன. E-ஏலமானது e-புராகியூர்மெண்ட் டெக்னாலஜீஸ் லிமிடெட் எனும் இணைய வழி e-ஏல முகமையால் https://ncltauction.auctiontiger.net இணையத்தளத்தில் வியாழக்கிழமை – 09.09.2021 அன்று நடத்தப்படும் அல்லது பின்வரும் வேறொரு நாளில் நடத்தப்படுவதாக இருந்தால் கலைப்பு அலுவலரால் ஏலதாரர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

தொடர்புடைய விவரங்கள்		
1.	கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தின் பெயர்	ஸ்டெர்லிங் பயோடெக் லிமிடெட்
2.	கூட்டுரிமைக் கடன் நிறுவனம் வணிகம் தொடங்கிய நாள்	23.03.1985
3.	கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தின் வணிகம் பதிவு செய்யப்பட்டது / தொடங்கப்பட்டது	நிறுவனப் பதிவாளர், மும்பை (மகாராஷ்ட்ரா)
4.	கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தின் கூட்டுரிமை வணிக அடையாள எண்	L51900MH1985PLC035738
5.	கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தின் பதிவு அலுவலக முகவரி	43, அட்லாண்டா, நாரிமன் பாயிண்ட், மும்பை – 400021, மகாராஷ்ட்ரா
6.	கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தின் கலைப்பு நடவடிக்கைத் தொடக்க நாள்	11.05.2019
7.	கலைப்பு அலுவலரின் பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, பதிவு எண்	பெயர்: Dr.(h.c) வழக்குரைஞர் மம்தா பினானி பதிவு எண்: IBBI/IPA-002/IP-N00086/2017-18/10227 முகவரி: 2ஆவது தளம், நிக்கோ ஹவுஸ், 2 ஹேர் தெரு, கொல்கத்தா - 700001, மேற்கு வங்கம். இந்த நடைமுறைக்கான சிறப்பு மின்னஞ்சல் முகவரி: liquidatorsterlingbiotech@gmail.com IBBI-இல் பதிவு செய்யப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரி: mamtabinani@gmail.com
8.	E-ஏல நாளும் நேரமும்	ஏலத் தொடக்க நாளும் நேரமும்: 09.09.2021 அன்று முற்பகல் 11:00 மணி ஏல முடிவு நாளும் நேரமும்: 09.09.2021 அன்று மாலை 05:00 மணி
9.	ஏலம் நடைபெறும் தளம் பற்றிய விவரங்கள்	e-புராகியூர்மெண்ட் டெக்னாலஜீஸ் லிமிடெட் - https://ncltauction.auctiontiger.net
10	கூட்டுரிமைக் கடன் நிறுவனம் பற்றிய விளம்பரத்தின் இணைப்பு	இதை ஏலதாரர்கள் கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தின் http://www.sterlingbiotech.in/liquidation.html இணையத்தளத்தில் பெறலாம்.
11	ஏல நடைமுறை ஆவணத்தைப் பெறும் முறை	E-ஏலத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை அடங்கிய ஏல நடைமுறை ஆவணத்தை ஏலதாரர்கள் கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தின் http://www.sterlingbiotech.in/liquidation.html இணையத் தளத்திலோ liquidatorsterlingbiotech@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு மின்மடல் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.
12	ஏலப்புள்ளி தாக்கல் செய்யும் முறை	ஏலக்கோரலானது e-ஏல முறையில் நடைபெறும். E-ஏலம் நடைபெறும் முறை கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தின் இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ள ஏல நடைமுறை ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி. அங்கேயே நேரிடையாகவோ liquidatorsterlingbiotech@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு மின்மடல் அனுப்பியோ இதைப் பெற்று அறியலாம்.
13	விற்பனை முறை	விற்பனை வெளிப்படையான e-ஏல முறையிலானது. உச்சபட்ச ஏலக் கோரலை ஏலதாரர்கள் வெளிப்படையான தளத்தில் காணலாம்.
14	தகுதி வரையறை மற்றும் டேவணித் தொகை விவரங்கள், தொகைகளைச் செலுத்துதல் முதலான வற்றுக்கான கால வரையறைகள் ஆகிய இதர விவரங்கள்	கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தின் இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ள ஏல நடைமுறை ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி. அங்கேயோ நேரிடையாகவோ அல்லது liquidatorsterlingbiotech@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு மின்மடல் அனுப்பியோ இதைப் பெற்று அறியலாம்.
15	குறைந்தபட்ச விலை மற்றும் ஏல உயர்வுத் தொகை	ரூ.548.46 கோடி ஏலத்தை ரூ.2 கோடி அல்லது அதன் மடங்குகளில் உயர்த்திக் கோரலாம்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எதுவும் கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தைச் செயல்பாட்டிலுள்ள நிறுவனம் எனும் அடிப்படையில் மொத்தமாக விலைக்கு வாங்குவது தொடர்பாக எந்த விலைகூறலையோ வாக்குறுதியையோ வழங்கவில்லை.

கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தைச் செயல்பாட்டிலுள்ள நிறுவனம் எனும் அடிப்படையில் மொத்தமாக விலைக்கு வாங்குவதற்கான இந்த நடைமுறை 'உள்ளது உள்ள இடத்தில்', 'உள்ளது உள்ளபடி', 'உள்ளது உள்ள நிலையில்', 'மாற்று வழங்கப்பட மாட்டாது' எனும் முறைகளில் எந்தப் பிரதிநிதித்துவமோ உத்தரவாதமோ ஈட்டுறுதியோ கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தாலோ கலைப்பு அலுவலராலோ வழங்கப்படாத வகையில் நடைபெறும். E-ஏலமானது இந்திய இன்சால்வன்சி மற்றும் பாங்க்ரப்ட்சி வாரிய (கலைப்பு நடவடிக்கை) ஒழுங்குமுறைகள் 2016-இன் விதிமுறைகளின்படி நடத்தப்படும். கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தைச் செயல்பாட்டிலுள்ள நிறுவனம் எனும் அடிப்படையில் மொத்தமாக விலைக்கு வாங்குவதற்கான இந்த நடைமுறையானது ஆர்வமுள்ள ஏலதாரருடைய தகுதிப்பாடுகளின் அடிப்படையில் முழுக்க முழுக்கக் கலைப்பு அலுவலர் எடுக்கும் விருப்புரிமை சார்ந்த முடிவுக்குக் கட்டுப்பட்டது என்பதை ஏலதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் இது ஏல நடைமுறை ஆவணத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றுக்கும் இந்தப் பொது அறிவிப்புக்கும் இன்சால்வன்சி மற்றும் பாங்க்ரப்ட்சி சட்டம் 2016-க்கும் ("சட்டம்") அதன் கீழான உரிய ஒழுங்குமுறைகளுக்கும் கட்டுப்பட்டது. இந்த அழைப்பு அறிவிப்பையும் இதன் கீழான கால வரையறைகள் அல்லது நடைமுறைகள் ஆகியவற்றையும் எந்த நேரத்திலும் எந்தக் காரணமும் தெரிவிக்காமல், எந்தப் பொறுப்புக்கூறலையும் செலவினத்தையும் ஏற்காமல் திருத்த மற்றும் / அல்லது நீக்கக் கலைப்பு அலுவலருக்கு உரிமை உண்டு. அவ்வாறு இந்த அழைப்பு அறிவிப்பில் மேற்குறிப்பிட்ட கால வரையறைகள் உட்பட எதிலேனும் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டால் அவை குறித்து கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தின் **http://www.sterlingbiotech.in/liquidation.html** இணையத்தளத்தில் தெரிவிக்கப்படும்.

மேலும் தகவல்களுக்கு அல்லது விவரங்களுக்கு நீங்கள் அணுக வேண்டியவர்: கலைப்பு அலுவலர், கைப்பேசி எண்: +91 98310-99551 அல்லது அவரது குழு உறுப்பினர், CS லோவ்கேஷ் பத்ரா, கைப்பேசி எண்: +91 83989-94547.

ஸ்டெர்லிங் பயோடெக் லிமிடெட் சார்பில்
ஒம்/-
Dr.(h.c) வழக்குரைஞர் மம்தா பினானி
கலைப்பு அலுவலர்
பதிவு எண்: IBBI/IPA-002/IP-N00086/2017-18/10227
liquidatorsterlingbiotech@gmail.com (இந்த நடைமுறைக்கு மட்டும்)
mamtabinani@gmail.com (IBBI-இல் பதிவு செய்யப்பட்டது)
கைப்பேசி எண்: +91 98310 99551
IBBI-இல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி கலைப்பு அலுவலரின் முகவரி: 2ஆவது தளம், நிக்கோ ஹவுஸ், 2 ஹேர் தெரு, கொல்கத்தா - 700001, மேற்கு வங்கம்.
நாள்: 21.07.2021